பொது நிருவாக சுற்றறிக்கை : 07/2023

எனது இலக்கம் : EST-3/POLIC/04/0064
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2023.05.08

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகளின் தலைவர்கள்

**2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பு மனுக்களை கையளித்துள்ள அரசியல் உரிமையுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு சலுகை வழங்குதல்.**

2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல் செய்துள்ள அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துள்ள அரச உத்தியோகத்தர்கள் தொடர்பாக பின்வருமாறு நடவடிக்கை எடுக்க 2023.05.02 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

02. 2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பாளர்களாக வேட்பு மனுக்களைக் கையளித்துள்ள அரசியல் உரிமைகளைக் கொண்ட அரச / அரச சார்பு நிறுவனங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு, அவர்கள் வேட்பாளர்களாக முன்னிற்கும் உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அரச / அரச சார்பு நிறுவனங்களில் சேவையாற்றி வருகின்றார்களாயின், மீள சேவைக்கு அறிக்கையிட முடியுமான வகையில் குறித்த உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேச எல்லைக்கு அப்பால் அமைந்துள்ள பிரதேசமொன்றில் அமைந்துள்ள அரச / அரச சார்பு நிறுவனங்களுக்கு இடமாற்றங்களைச் செய்து சேவைக்கு சமூகமளிப்பதற்கான வாய்ப்பை வழங்க குறித்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

03. அதன்படி, தாபன விதிக்கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 2:3:2 ஆம் உபபிரிவின் ஏற்பாடுகளின் படி 2023 உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுவைக் கையளித்துள்ள அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் வேட்பு மனுக்களைக் கையளித்துள்ள அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துள்ள அரச சார்பு உத்தியோகத்தர்கள் 2023.05.09 ஆந் திகதி முதல் குறித்த நிறுவனத் தலைவர்களினால் குறித்தொதுக்கப்படும் சேவை நிலையமொன்றுக்கு சேவைக்காக அறிக்கையிடல் வேண்டும்.

04. இந்த சுற்றறிக்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்./ கே.டீ.என் ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 0112-696478
தொலைநகல் இலக்கம் : 0112-692158
மின்னஞ்சல் முகவரி : ade-iii@pubad.gov.lk